**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.**
**அசல் வழக்கு எண். 224 /2022**

2024 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 31–ம் நாள் புதன்கிழமை என்பவரது சாட்சியின் வாக்குமூலம், 1873 ஆம் ஆண்டு இந்திய சாட்சியசட்டப் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திரு T. சோழவேந்தன் B.A.,B.L., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி, அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 31.01.2024 | தந்தை/கணவர் பெயர்: | பழனி |
| பெயர்: | பரமசிவம் (PW-1 Chief ) | வயது : | 54/2024 |
| கிராமம்: | சீர்காழி | தாலுக்கா: | சீர்காழி |
| தொழில்: | | | |

**<u>முதல் விசாரணை : 31.01.2024.</u>**

நான் இவ்வழக்கின் வாதியாவேன். எனக்கு வழக்கு விபரம் தெரியும். முதன்மை சாட்சியத்தை சத்தியபிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். சத்திய பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விபரங்கள் அனைத்தும் உண்மைதான். சத்தியபிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். வழக்கிற்கு ஆதரவாக கீழ்காணும் ஆவணங்களை தாக்கல் செய்கிறேன்.

14.05.1979 தேதியிட்ட 1–வது அயிட்ட சொத்திற்கு எனது சித்தப்பா சிவந்தி பெயரில் உள்ள கிரயப்பத்திரத்தின் சான்றிட்ட நகலை தாக்கல் செய்கிறேன். **அது வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** 20.05.1970 தேதியிட்ட தாவா 2–வது அயிட்ட சொத்திற்கு எனது சித்தப்பா சிவந்தி பெயரில் உள்ள கிரயப்பத்திரத்தின் சான்றிட்ட நகலை தாக்கல் செய்கிறேன். **அது வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** 26.04.2018 தேதியிட்ட தாவா 2–வது அயிட்ட சொத்திற்கான கணினி சிட்டாவை தாக்கல் செய்கிறேன். **அது வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** 29.12.2021 தேதியிட்ட தாவா சொத்தைப் பொறுத்து

எனது சித்தப்பா எனக்கு எழுதி வைத்த உயில் ஆவணத்தின் அசலை தாக்கல் செய்கிறேன். **அது வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** 10.03.2022 தேதியிட்ட 2,3 பிரதிவாதிகள் 1–ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த பாகப்பாத்திய விடுதலை பத்திரத்தின் சான்றிட்ட நகலை தாக்கல் செய்கிறேன். **அது வா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுக்கோளுக்கு இணங்க முதல் விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.